**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 39/2025**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 12.11.2025.**

| | |
|---|---|
| **Name : பாலசுந்தர்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேட்டூர் நெடுஞ்சாலை துறை பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.01.2025ம் தேதியன்று சுமார் 4.45 மணிக்கு வைத்தியலிங்கம் மற்றும் அவரது மகன் தேவகண்ணன் இருவரும் நிலையம் ஆஜராகி சொத்து பிரச்சனை சம்மந்தமாக என தம்பி குமாரவேல் அது சம்மந்தமாக அடிப்பதாக நிலையம் வந்து புகார் தெரிவித்தார்கள். காவல் நிலைய பொறுப்பிலிருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் பரமசிவம் மற்றும் நான் காவல் நிலையத்தில் இருந்த போது சிறப்பு உதவி ஆய்வாளர் பரமசிவம் என்னை விசாரணை செய்ய சொன்னார்.

2) புதூரைச் சேர்ந்த வைத்தியலிங்கம் என்பவரை விசாரிக்க சென்ற போது அங்கு குமரவேல் எங்கள் அம்மா வீட்டில் இருந்ததாகவும் வைத்தியலிங்க வீட்டு கதவு மற்றும் ஜன்னலை உடைந்தது சம்மந்தமாக விசாரணை செய்த போது அவர் என்னை பார்த்து தெவிடியா பையா கண்டார ஒலி என்று திட்டியும், என் யூனிபார்முடன் கீழே தள்ளி வயிற்றில் எட்டி உதைத்தும், வலி தாங்க முடியாமல் கத்தினேன் அருகிலிருந்தவர்கள் ஓடி வருவதை பார்த்ததும் குமரவேல் அருகிலிருந்த கட்டையை எடுத்து இங்கிருந்து கிளம்பவில்லை என்றால் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியும் அங்கிருந்து நிலையம் வந்து அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுத்தேன்.

3) தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் அளித்தது தான். புகாரில் உள்ள

விவரம் தெரியும். புகார் மனு **அ.சா.ஆ–1** ஆகும். ஆஜர் எதிரி தான் என்னை அடித்த நபர் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். சிறப்பு உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.25 11:30:15 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 39/2025**

**Prosecution witness : அ.சா.2** **Date : 12.11.2025.**

| | |
|---|---|
| **Name : பரமசிவம்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.01.2025 ம் தேதியன்று மாலை 06.45 மணிக்கு நானும் முதல் நிலை காவலர் 1792 பாலசுந்தர் என்பவரும் நிலைய அலுவலில் இருந்த போது குஞ்சாண்டியூர் புதூரைச் சேர்ந்த வைத்தியலிங்கம் அவரது மகன் தேவகண்ணன் ஆகிய இருவரும் காவல் நிலையம் வந்து அன்றையதினம் பகல் 2.30 மணிக்கு வைத்தியலிங்கத்தின் தம்பி குமரவேல் என்பவர் வைத்தியலிங்கம் வீட்டிற்கு சென்று சொத்து பிரச்சனை சம்மந்தமாக வைத்தியலிங்கம் மனைவி கனகாம்பாள் என்பவரை அடித்துவிட்டதாகவும் வீட்டின் கதவு கண்ணாடியை உடைத்துவிட்டதாகவும், வைத்தியலிங்கத்தின் மனைவியை குஞ்சாண்டியூர் தங்கவேல் மருத்துவமனையில் சேர்த்திருப்பதாகவும் குமரவேல் வைத்தியலிங்கம் வீட்டிற்கு முன்பு படுத்துக் கொண்டு வீட்டிற்குள் செல்லவிடாமல் தகராறு செய்ததாக புகார் செய்தார். நான் என்னுடன் இருந்த முதல் நிலை காவலர் பாலசுந்தர் என்பவரை அவர்களுடன் அனுப்பி வைத்தேன்.

2) பின்னர் 7.45 மணிக்கு நான் நிலையத்திலிருந்த போது பாலசந்தர் நிலையம் வந்து வைத்தியலிங்கத்தின் வீட்டிற்கு சென்ற போது வீட்டின் கதவு கண்ணாடி உடைக்கப்பட்டிருந்ததாகவும், குமரவேல் அங்கு இல்லாததால்

அருகிலிருந்தவர்களிடம் விசாரித்த போது அவரது அம்மா பாப்பாத்தி வீட்டில் இருப்பதாக தகவல் தெரிந்து பாப்பாத்தி வீட்டிற்கு முன்பு சென்று குமரவேலை அழைத்த போது குமரவேல் வெளியே வந்து என்னடா தெவிடியா பையா, கண்டார ஒலி பையா, போலீசுனா பெரிய ஆளா என்னை விசாரிக்க வந்துட்ட என்று சொல்லி கையால் பாலசந்தரை இடது கன்னம், இடது தோள்பட்டையில் அ டித்துவிட்டு பாலசந்தரின் யூனிபார்மை இழுத்து கீழே தள்ளி வயிற்றில் காலால் எட்டி உதைத்ததாகவும், பாலசசந்தர் வலி தாங்க முடியாமல் கத்திய போது அருகிலிருந்தவர்கள் வருவதை பார்த்த குமரவேல் அருகிலிருந்த கட்டையை காட்டி இந்த இடத்திலிருந்து உடனே செல்லவில்லை என்றால் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி சென்றதாக என்னிடம் தெரிவித்துவிட்டு காவல் உதவி ஆய்வாளர் அவர்களிடம் புகார் கொடுக்க சென்றார். ஆஜர் எதிரியை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை–</u> இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.25 11:30:23 +0530

Judicial Magistrate No.II,
Mettur.